**தலைப்பு 166 – நீர் வழங்கல் அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நீர்வழங்கல் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் நீர் வழங்கல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர் வழங்கல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) அரசாங்கக் கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் எஸ்ஏ/எம்ஏஏ/02/01/01 ஆம் இலக்க 2022 சனவரி 12 ஆந் திகதிய கடிதத்தின் படி நிதிக்கூற்றுக்களிலுள்ள ''அறிக்கையிடலுக்கான அடிப்படை'' திருத்தப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் அது வெளிப்படுத்தப்படாது முன்னைய ஆண்டின் தொகைகளிற்கான திருத்தங்கள் மாத்திரம் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கையின் படி சம்பளம், கூலி மற்றும் ஏனைய ஊழியர் நலன்களுக்கான மீண்டுவரும் செலவினம் ரூபா 93,158,336 ஆன போதிலும், அமைச்சின் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 3,015,900 அதிகமாக அதாவது ரூபா 96,174,236 எனக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | அரசாங்கக் கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2021/03 ஆம் இலக்க 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் வழிகாட்டல்கள் 06 இன் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க ப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கையின் படி ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான மீண்டுவரும் செலவினம் ரூபா 83,105,722 ஆன போதிலும், அமைச்சின் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 3,015,900 குறைவாக அதாவது ரூபா 80,089,822 எனக் காட்டப்பட்டிருந்தது | பதில் அளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி நிலைமைக் கூற்றிலுள்ள ரூபா 388,116,972 பெறுமதியயான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ரூபா 350,294,498 பெறுமதியான போக்குவரத்து உபகரணங்கள் அமைச்சில் காணப்படுவதாக அதற்குரிய எஸ்ஏ 6 ஆம் படிவத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த போக்குவரத்து உபகரணங்களில் ஏனைய நிறுவனங்களிற்கு உரித்தான ரூபா 94,830,000 பெறுமதியான 14 மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கியிருந்தமையும் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 4,500,000 பெறுமதியான டபள் கெப் வாகனம் உள்ளடங்கியிருக்காமையும் முன்னைய ஆண்டுகளில் கைதவிர்க்கப்பட்டிருந்த ரூபா 8,100,000 பெறுமதியான 03 வாகனங்களை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காது கணக்குப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமையும் அமைச்சின் புத்தகங்கள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப் பட்டது. மேற்படி குறைபாடுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் பெறுமதியின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | அமைச்சின் நிலையான சொத்துக்கள் சரியாக நிதிக் கூற்றுக்களிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் உள்ளடக் கப்படு வேண்டும். |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சின் காசுப் பாய்ச்சல் கூற்றிலுள்ள செயற்பாட்டு நடவடிக்கைளிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் இயக்கச் செலவினங்களிற்காக ரூபா 176,251,618 செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிட ப்பட்டுள்ள போதிலும், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி அது ரூபா 9,858,703,850 ஆகக் காணப்பட் டமையால் அந்த பெறுமதிகளிற்கு இடையே ரூபா 9,682,452,232 வேறுபாடு அவதானிக்கப் பட்டது. | பதில் அளிக்கப்படவி ல்லை. | அரசாங்கக் கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2021/03 ஆம் இலக்க 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் வழிகாட்டல்கள் 06 இன் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காசுப் பாய்ச்சல் கூற்றிலுள்ள மூலதன செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது அவற்றின் கொள்வனவிற்காக ரூபா 9,686,978,781 செலவிடப்பட்டுள்ளதாக குறிப்படப்பட்டிருந்த போதிலும், கணக்காய் விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல் களின் படி அது ரூபா 4,526,549 ஆகக் காணப்பட்டமையால் அந்த பெறுமதிகளிற்கு இடையே ரூபா 9,682,452,232 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பதில் அளிக்கப்படவி ல்லை. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான 32 அபிவிருத்தி செயற்திட்டங்க ளிற்குரிய தேறிய நிதி ஏற்பாடு ரூபா 78,320 மில்லியன் ஆகும். இருப்பினும், அந்தச் செயற்திட்டங்களிற்குரிய செலவினம் ரூபா 51,823.5 மில்லியன் ஆக மாத்திரம் காணப்பட்டமையால் ரூபா 26,496.5 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய தேறிய நிதி ஏற்பாட்டின் மீதான சேமிப்பு 34 சதவீதம் ஆகக் காணப்பட்டது. | நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை காரணமாகவும் பாதகமான பொருளாதார நிலைமை காரணமாகவும் உரியவாறு கட்டுநிதி கிடைக்காமையே இதற்கான காரணமாகும். | நிதிப்பிரமாணம் 50 இன் படி செலவின மதிப்பீடுகளை சரியாக மேற்கொள்ள வேண் டும். |
| (ஆ) | செலவினக் குறியீடு 166-1-2-1703 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான முழுமையான தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய கொரோ னா நிலைமை காரணமாக எதிர்பாத்த விதத்தில் அமைச்சின் பணிகளை நிறைவேற்ற முடியாது போயிருந்தமையே இதற்கான காரணமாகும். | நிதிப்பிரமாணம் 50 இன் படி செலவின மதிப்பீடுகளை சரியாக மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | மூன்று மீன்டுவரும் செலவின விடயங்களிற்குரிய ரூபா 1,800,000 நிதி ஏற்பாடுகள் நி.பி. 66 இன் கீழ் முழுமையான ஏனைய செலவு விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. | வெளிநாட்டுப் பிரயாணங் கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை மற்றும் சீருடைகளிற்கான கோரிக்கைகள் எதிர்பார்த்த அளவில் கிடைத்திருக் காமை காரணமாக நிதி ஏற்பாடு எஞ்சியிருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 05 மீண்டுவரும் செலவின விடயங்களிற்குரிய ரூபா 1,970,500 தேறிய நிதி ஏற்பாட்டிலிருந்தான சேமிப்புகள் 23 சதவீதத்திலிருந்து 53 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக எதிர்பாத்த விதத்தில் செலவுகளை செய்ய முடியாது போயிருந்தமையே இதற்கான காரணமாகும். | -மேற்படி- |
| (உ) | மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் காணப்பட்ட நலிவுகள் காரணமாக 05 மீண்டுவரும் செலவின விடயங்களிற்குரிய ரூபா 8,350,000 வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டிலிருந்தான சேமிப்புகள் 31 சதவீதத்திலிருந்து 98 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக எதிர்பாத்த விதத்தில் பணிகளை நிறைவேற்ற முடியாது போயிருந்தமையே இதற்கான காரணமாகும். | -மேற்படி- |
| (ஊ) | 03 மீண்டுவரும் செலவினங்களிற்குரிய ரூபா 4,100,000 தொகையான மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து 36 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான அளவு நி.பி. 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த செலவினம் அதற்கேற்ப ஏற்படாமையால் செலவின விடயங்களிற்கான தேவைகளிற்கு ஏற்ப காணப்படுகின்ற சட்ட திட்டங்களின் படி நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (எ) | 10 மூலதனச் செலவின விடயங்களிற்கான ரூபா 1,442.7 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | பொது திறைசேரியிடமிருந்து மானியம் கிடைக்காமை, தற்காலிக கொடுப்பனவுகளிற்காக கோரப்பட்ட நிதி ஏற்பாட்டிற்காக கோரிக்கை சமர்ப்பிக்கப்படாமை, ஒதுக்கப்பட்ட சில நிதி ஏற்பாடுகளிற்காக கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை, இறக்குமதி செய்யப் பட்ட உபகரண்களுக்கு பணம் செலுத்தாமை, ஆண் டின் போது இறக்குமதி செய்யப்படாமை, வீதி இழப்புக் கொடுப்பனவுகள் மற்றும் காணிக் கையேற்புகள் இடம்பெற்றிருக்காமை, சுங்க வரி/வெற் வரிக்காக கொடுப்பனவு செய்யப்படாமை போன்ற காரணங்களால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 21 மூலதனச் செலவு விடயங்களிற்கான ரூபா 67,771 தேறிய நிதி ஏற்பாட்டிலிருந்து 2 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக எதிர்பாத்த் செலவுகள் ஏற்படாமையே இதற்கான காரணமாகும். | -மேற்படி- |
| (ஐ) | நி.பி. 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களிலிருந்து 02 மூலதனச் செலவின விடயங்களிற்காக ரூபா 1,327.05 மில்லியன் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு மாற்றீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டைக் காட்டிலும் கூடுதலான தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு வளத் திணைக் களத்திற்கு பட்டியல்களை பரிந்துரைக்கையில் நிதி ஏற்பாடு காணப்பட வேண்டுமென்பதால் இவ்வாறு மாற்றீடு செய்யப்பட்டது. | -மேற்படி- |
| (ஒ) | மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் காணப்பட்ட நலிவுகள் காரணமாக 03 மூலதனச் செலவின விடயங்களிற்குரிய ரூபா 14,194.67 மில்லியன் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டிலிருந்தான சேமிப்புகள் 61 சதவீதத்திலிருந்து 81 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக எதிர்பாத்த விதத்தில் பணிகளை நிறைவேற்ற முடியாது போயிருந்தமையே இதற்கான காரணமாகும். | -மேற்படி- |
| (ஓ) | 06 மூலதன செலவினங்களிற்குரிய ரூபா 25,134.16 மில்லியன் தொகையான மதிப்பி டப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து 04 சதவீதம் முதல் 34 சதவீதம் வரையான அளவு நி.பி. 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய பாதகமான நிலைமை காரணமாக எதிர்பார்த்த செலவினம் அதற்கேற்ப ஏற்படாமையே இதற்கான காரணமாகும். | -மேற்படி- |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | | | |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சடத்தின் 16.2 ஆம் பிரிவு | வருடாந்த நிதிக் கூற்றுக் களுடன் இணைத்து வருடாந்த வரைவு செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | தேசிய கணக்காய்வுச் சடத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவையின் நிதிப்பிரமாணம் 371(இ) | பல்வேறு பணிகளிற்காக 33 சந்தர்ப்பங்களில் வழங்கப் பட்டிருந்த ரூபா 251,979 செயல்நிமித்த உப கட்டுநிதிகள் குறித்த பணிகள் நிறைவேற்றப் பட்டவுடன் | நாட்டில் நிலவிய கொரோனா நோய் காரணமாக முற்பணங்களை தீர்த்தல் தாமதமடைந்தது. | பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன் முற்பணங்கள் தீர்க்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீர்க்கப்பட்டிருக்க வில்லை. மேலும் 14 சந்தர்ப் பங்களில் முன்னர் வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்வு செய்யப்படு முன்னரே ரூபா 72,093 மீண்டும் முற்பணமாக வழங்கப்பட்டிருந் தது. | | |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | அமைச்சுக்குச் சொந்தமான 20 வாகனங்களிற்காக எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | எஞ்சிய வாகனங்களின் எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனையை எதிர் காலத்தில் மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிராகரம் எரிபொருள் நுகர்ச்சிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | | | |
| | • 3.1.4 ஆம் பந்தி | 2020 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருந்த பற்றாக்குறைகள், மேலதிகங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய் விற்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. | பொது நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிராகரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | • 3.1.5 ஆம் பந்தி | பொது 47 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பில் ஒவ்வொரு நிதி ஆண்டினதும் பெப்ரவரி 26 இற்கு முன்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2020 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய் மையாய்வின் போது இனங் காணப்பட்டிருந்த ஏலமிடப்பட வேண்டிய மற்றும் கைதவிர்க் கப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பில் அந்த ஆலோச னைகள் பின்பற்றப்பட்டிருக்க வில்லை. | பதில் அளிக்கப்படவி ல்லை | -மேற்படி- |
| (உ) | 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை யின் 3.1 ஆம் பந்தி | அமைச்சினால் மீளாய்வாண்டில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு 04 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. | முன்னைநாள் கௌரவ அமைச்சரின் அறிவுறுத் தலின் படி இரத்தினபுரி மாவட்டத்தில் நீர் வழங்கல் திட்டங்களின் கண்காணிப்பிற்காக ஒரு மாத காலத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. | சனாதிபதி செயல கச் சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக வருடாந்த கொள்வ னவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த சில செயற்திட்டங்கள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த குறைபா டுகள் திருத்தப்பட்டு 2023 ஆம் ஆண்டுக்குரிய செயல் நடவடிக்கைத் திட்ட த்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது. | பொது நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்று மட்டங்களை அடைந்திருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாரியளவிலான 09 நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய 2021 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயல் முன்னேற்றங்களை அடைய முடியாது போயிருந்தது. | கொவிட் 19 நோய்த் தாக்கம், பாதகமான காலநிலை, இறக்கு மதி செய்யப்பட வேண்டிய உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்கள் கிடைப்பதில் தாம தம், உப ஒப்பந்த காரர்களிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள் வதில் தாமதம் மற்றும் அவர்களது நலிவான செயலாற் றல், செயற்திட்ட நோக்கெல் லைகள் மாற்றமடைதல், காணி கையேற்றல் நடவடிக்கைகள் தாமதமடைதல், விவசாயகளின் எதிர்ப்புகள் என்பன இதற்கான காரணங்களாகும். | ஆண்டின் தொடக்கத் தில் திட்டமிடப்பட்டிரு ந்தவாறு குறித்த செயற்திட்டங்களில் செயல் முன்னேற்றம் அடையப்படுதல் வேண் டும். |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட பிரதிநலன்களை பெற்றுக் கொண்டிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சீன அரசாங்கத்தின் மானியமாக ரூபா 1,950 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த நீர் தொழில்நுட்பத்திற்கான சீன மற்றும் இலங்கை ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மற்றும் கண்காட்சி நிலையம் 2021 பெப்ரவரி மாதத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2022 சனவரி 10 வரையிலும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நிலையம் அமைக்க ப்பட்ட பின்னர் அங்கு தேவையான நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்துச் செயற்பாடுகளும் செயற்திட்ட த்தினால் மேற்கொள்ளப்ப ட்டது. | செயற்திட்டங்களிலி ருந்து எதிர்பார்க்க ப்பட்ட செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்த காரரின் நலிவான செயலாற்றல், காணிகளை விடுவித்துக் கொள்வதில் தாமதங்கள், ஒப்பந்தங்களை கையளிப்பதில் தாமதங்கள், சுற்றாடல் சிக்கல்கள், மீளக் குடியமர்த்தல் தாமதங்கள், கொவிட் 19 இன் தாக்கங்கள் மற்றும் அரசாங்க கொள்கையின் படி நிதி ஏற்பாடுகளை நிறுத்துதல் போன்ற காரணங்களால் அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழுள்ள 16 வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்களின் பூரணப்படுத்தல் காலத்தை விஞ்சி ஒப்பந்த நீடிப்பு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக, அந்தச் செயற்திட்டங்களை பூரணப்படுத்த வேண்டிய காலமானது 184 நாட்கள் முதல் 1,779 நாட்கள் வரை குறிப்பிடத்தக்களவு தாமதிக்கப்ப ட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்த காலத்தினுள் எதிர்பார்த்த செயல் முன்னேற்றதை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | திட்டமிடப்பட்டவாறு எதிபார்த்த காலத்தில் செயற்திட்டங்களை பூரணப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 4.2.1 ஆம் வழிகாட்டலின் படி குறைந்தபட்சம் 03 ஆண்டுகளை உள்ள டக்கியவாறு பிரதான கொள்வனவுகள் திட்டமும் வருடாந்த கொள்வனவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இற்காக கொள்வனவுகள் திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | சீன இலங்கை ஒருங்கிணைந்த ஆய்வு நிலையத்திற்காக வேன் வாகனமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்கையில், அமைச்சுக் கொள்வனவுச் சபைக்குப் பதிலாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மத்திய பிராந்திய உதவிச் சேவைகள் நிலையத்தினால் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த வேன் வாகனத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,871,080 வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. | அனைத்துச் செயற்பாடுகளும் உரிய முறையில் இடம்பெற்றுள்ளதுடன், அதற்காக சகல அங்கீகாரங்களும் பெறப்பட்டுள்ளன. | கொள்வனவு நடவடிக்கைகள் குறித்த நிறுவனத்திலாயே மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **ஆங்கீகாரமதின்றி வாகனங்களைப் பயன்படுத்துதல்**<br>ஆரசாங்க செலவின முகாமைத்துவம் தொடர்பில் சனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க கடிதத்தின் 3.3 ஆம் பந்தியின் படி நீர் வழங்கல் அமைச்சரால் பயன்படுத்தி வரப்படுகின்ற நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரித்தான CBG-7386 ஆம் இலக்க வாகனத்திற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முன் அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழங்கப்பட்டுள்ள சனாதிபதி செயலக அறிவுறுத்தலின் படி செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | **ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான வாகனங்களை பயன்படுத்துதல்**<br>-----------------------------------------------------------------------------<br>ஏனைய 04 அரசாங்க நிறுவனங்களிற்குச் சொந்தமான 09 வாகனங்கள் அமைச்சினால் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தன. | இந்த அமைச்சுக்கான அமைச்சர்கள் அடிக்கடி மாற்றப்பட்டிருந்தமை மற்றும் செயலாளர்கள் மாற்றப்பட்டிருந்தமை காரணமாக அவர்களால் எடுத்துவரப்பட் டிருந்த வாகனங்கள் இந்த அமைச்சின் கௌரவ அமைச்சர் மற்றும் அவரது பதவியணியினருக்கும் அமைச்சின் உத்தியோகத்த ர்களிற்கும் அவர்களது பயன்பாட்டிற்காக வழங்கப் பட்டுள்ளன. | ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான வாகனங்களை பயன்படுத்துகையில் அவற்றை முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதுள்ள வாகனங்கள்**<br>-----------------------------------------------------------------------------<br>பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்காத 03 வாகனங்கள் அமைச்சின் வளவில் பாதுகாப்பின்றி திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களை திருத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்களை கைதவிர்ப்பதற்கு தீர்மானிக் கப்பட்டிருந்த போதிலும், அமைச்சில் போதியளவு வாகனங்கள் இல்லாமை யால் அவற்றை திருத்துவத ற்கு செயலாளர் அவர்க ளால் அங்கீகாரம் வழங்கப் பட்டு அதன்படி நடவடி க்கை எடுக்கப்பட்டு வருகி ன்றது. | பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்காத வாகனங்களை திருத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்குத் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டுள்ள வாகனங்கள்**<br>-----------------------------------------------------------------------------<br>அமைச்சினால் 2019 மே 08 ஆந் திகதி முதல் ஒரு வாகனம் நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு மேம்படுத்தல் செயற்திட்டத்திற்கும், 02 வாகனங்கள் 2020 ஆகஸ்ட் 25 ஆந் திகதி முதல் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கும் விடுவிக்கப்பட்டிருந்தன. | வாகனங்களின் தேவை நிமித்தம் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் அந்த வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. | ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வாகனங்களை மீளப் பெறுவதற்கு அல்லது அவற்றை முறையாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(உ)** | <u>**விளைவற்ற சொத்துக்கள்**</u><br>அமைச்சின் கீழுள்ள சீன இலங்கை ஒருங்கிணைப்பு ஆய்வு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 39,183,806 பெறுமதியான நடமாடும் நீர்த் தரப்பரிசோதனை வாகனம் 2020 செப்தெம்பர் 15 முதல் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரை எவ்வித ஆய்வு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படாது பாதுகாப்பின்றி திறந்த வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது | மிக விரைவில் அதனை சேவைகளை வழங்குவதற்காக பயன்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். | விளைவற்ற சொத்துக்களை எதிர்பார்த்த பணிகளிற்காக விரைவில் பயன்படுத்த வேண்டும். |

### 3.7 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவையின் 128(1) மற்றும் 1999 ஏப்ரல் 09 ஆந் திகதிய 1/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 மற்றும் 06 ஆம் பந்திகளின் பிரகாரம் பிணை வைப்பதற்கு கடப்பாடுடைய உத்தியோகத்தர்கள் 03 மாதங்களிற்குள் பிணை வைக்க வேண்டிய போதிலும், சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத ஆனால் பிணை வைக்க வேண்டிய பதவியொன்றை வகிக்கும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் அவ்வாறு பிணைகளை பெற்றுக் கொள்தல் நிறுவனத் தலைவரின் பொறுப்பாக காணப்படுகின்ற போதிலும், அமைச்சின் உதவி/பிரதி பணிப்பாளர் பதவிகளை வகிக்கின்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அவ்வாறு பிணைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் மேலதிகச் செயலாளர் 2022 மார்ச் 01 ஆந் திகதி ஓய்வு பெற்றுள்ளதுடன், மூன்று உதவி/பிரதி பணிப்பாளர்கள் பிணை வைத்துள்ளனர். | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிணைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணிகளை கையேற்பதற்காக இழப்பீடு செலுத்த வேண்டிய 23 செயற்திட்டங்கள் தாமதிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் ரூபா 33,373,453 தொகை வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. | காணிகளை கையேற்பதற்கான நடவடிக்கைகளிற்கு நீண்டகாலம் எடுக்கின்றது. | செயற்திட்டங்களிற்காக காணிகளை கையேற்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அமைச்சினால் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய பாதுகாப்பு ஊழியர்களின் எண்ணிக்கை சேவையில் ஈடுபடுத்தப்படாதிருந்த போதிலும், அமைச்சினால் குறித்த சேவையினை வழங்கும் நிறுவனத்திற்கு ரூபா 129,578 தொகையும், அலுவலக சுத்திகரிப்பு சேவையினை வழங்கும் நிறுவனத்திற்கு ரூபா 432,499 தொகையுமாக மொத்தம் ரூபா 562,077 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், 2021 பெப்ரவரி 15 முதல் 2021 பெப்ரவரி 28 | எதிர்காலத்தில் சேவைக்கு சமூகமளிக்கையில் அதனை உறுதிப்படுத்துவதற்கு கையொப்பமிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டு ள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

வரையான காலத்தில் ஊழியர்களின் வருகையை உறுதிப்படுத்திக் கொள்ளாது அலுவலகச் சுத்திகரிப்பு மற்றும் சுகாதார சேவைகளை வழங்கிய நிறுவனத்திற்கு ரூபா 147,500 செலுத்தப்பட்டிருந்தது.

## 3.9 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சரின் பதவியணியினர் சார்பில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றிற்காக அறவிடப்பட்ட பணத் தொகைகள் தாமதிக்கப்படாது குறித்த நிதியங்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் முதல் 2021 செப்தெம்பர் வரையான 07 சந்தர்ப்பங்களில் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு உதவு தொகையாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,071,320 தாமதமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 நோய்த் தொற்று காரணமாக அலுவலகம் மூடப்பட்டமை யால் தாபால் செய்தல் தாமதமடைந்தது. | நியதிச்சட்ட கொடுப்பனவுகள் தாமதிக்காது உரிய நிறுவனங்களிற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்ககளை அடைந்துகொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நீர் வழங்கல் அமைச்சின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் என 2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் குடி நீரை வழங்குதல் மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை உறுதிப்படுத்துதல் என்பன இனங்காணப்பட்டிருந்தன. அந்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக மீளாய்வாண்டிற்கான பிரதான செயலாற்றல் குறிகாட்டியாக நீர்க்குளாய் பொருத்துதல் பிரதேசங்களை 60.38 சதவீதம் வரை அடைந்துகொள்ளல் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதற்காக வழங்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த புதிய நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை 435,851 ஆகும். மேற்படி இலக்கை அடைவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு 313,504 இணைப்புக்கள் இலக்காக வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த இலக்கானது 2022 ஒக்தோபர் மாதத்தில் 215,000 எனத் திருத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் வழங்கப்பட்டிருந்த புதிய நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை 192,087 மாத்திரமாக காணப்பட்டமையால் | செயலாற்றல் குறிகாட்டி திருத்தப்பட்ட பின்னர் இலக்கி டப்பட்ட நீர் இணைப்புக் களின் எண்ணிக்கையில் 89.3 சதவீதம் அடையப்பட்டுள்ளது. | செயலாற்றல் குறிகாட்டி இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இலக்கிடப்பட்ட எண்ணிக்கையின் அடைவ 89.3 சதவீதமாக காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| (ஆ) 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய எம்எஸ்டிடபிள்யூ/8/65 ஆம் இலக்க நிலைபேறான இலக்குகள் மற்றும் வனச்சீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைக ளிற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெயரிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(1) ஆம் பிரிவின் படி ஒவ்வொரு கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனத்தினதும் தொழிற்பாடுகளை தொடர்ந்தேற்சியான அடிப்படையில் மீளாய்வு செய்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று இருத்தல் வேண்டுமென்பதுடன் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் படி அந்தக் குழுவானது காலாண்டுக்கு ஒரு முறையேனும் கூட்டப்பட்டு அதாவது வருடத்திற்கு 04 கூட்டங்களையேனும் நடாத்துதல் வேண்டும். இருப்பினும், டீஎம்ஏ/எம்எஸ்/எம்/2021/02 ஆம் இலக்க 2021 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் படி ஆண்டிற்கு 02 கூட்டங்களை நடாத்துதல் போதுமானது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அமைச்சினால் மீளாய்வாண்டிற்காக ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | 2021 மே 11 ஆந் திகதி ஒரு கூட்டம் நடாத்தப்பட்டது. | தேசிய கணக்காய் வுச் சட்டம் மற்றும் முகாமைத்துவ கண க்காய்வு சுற்றறிக் கையின் பரிந்துரை களின் படி செயற்ப டுதல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஆங்கீகரித்த பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிச் செலவுகள்** | | |
| (i) அமைச்சில் காணப்பட்ட ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 35 ஆனதுடன், அது அங்கீகரித்த பதவியணியில் ஏறத்தாழ 24 சதவீதம் ஆகும். அதில் சிரேஷ்ட மட்டத்திலான 14 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்திலான 04 வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்திலான 10 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்திலான 07 வெற்றிடங்களும் காணப்பட்டன. | குறித்த வெற்றிடங்களிற்காக உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்ட போதிலும், இது வரை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் சிரேஷ்ட மட்டத்திற்கான பதவிகள் 07 ஆல் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டில் அந்த பதவிகளில் 03 வெற்றிடங்களும் 2021 ஆம் ஆண்டில் 06 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | தேவைக்கேற்ப பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். |
| (iii) அமைச்சின் மேலதிக செயலாளர் (செயற்திட்ட கண்காணிப்பு) பதவிக்கு தற்காலிக பதவியொன்று அங்கீகரித்துக் கொள்ளப்பட்டு அதற்காக 2021 யூன் 14 முதல் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் சம்பளமாக ரூபா 574,800 செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். | -மேற்படி- |
| (iv) அமைச்சிற்காக அவ்வப்போது பதவிகள் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிரந்தரமான ஆட்சேர்ப்புகள் செய்யப்படாது பதிற்கடமை அடிப்படையிலும் கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமையால் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 04 பதவிகளிற்காக கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் ஏனைய படியாக ரூபா 2,183,752 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த பதவிகளிற்கு நியமனங்களை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் இன்மையால் கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். | அங்கீகரிக்கப்பட பதவிகளிற்காக நிரந்தர நியமனங்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (v) ஆரசாங்க செலவினத்தை முகாமைத்துவம் செய்தல் என்ற தலைப்பில் 2010 மே 14 ஆந் திகதி வெளியிடப்பட்ட சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகக் கடிதத்தின் 2.2 ஆம் | அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து ஆட்சேர்ப்புகளும் கௌரவ | தற்காலிக அல்லது ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுவார் |

| | | |
|---|---|---|
| பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளிற்காக தற்காலிக அல்லது ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுவார்களாயின், அவர்கள் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளிலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இருப்பினும், அமைச்சின் பதவியணிக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்த 03 பதவிகளிற்குரிய 06 உத்தியோகத்தர்கள் அவ்வாறு உரிய தகைமைகளை பூரணப்படுத்தியிருந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரின் தற்றுணிபின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றமையால் குறித்த தகைமைகளை பரிசோதித்தல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகும். | களாயின், அவர்கள் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளிலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல |
| **(ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மனித வளம்** | | |
| (i) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து கிடைத்த தகவல்களின் படி சபையின் 06 பதவிகளுக்குரிய 21 உத்தியோகத் தர்கள் மீளாய்வாண்டில் அமைச்சின் கடமைகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 28.73 மில்லியன் சம்பளம் மற்றும் படிகளாக சபையால் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த ஊழியர்கள் அமைச்சின் பணிகளிற்காக 2018 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டிருந்தனர். | ஏனைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனித வளத்தை குறித்த நிறுவனத்திற்கு விடுவித்தல் வேண்டும். |
| (ii) எவ்வாறாயினும், அமைச்சினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து 08 பதவிகளுக்குரிய 15 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பெறப்பட்டு அமைச்சின் கடமைகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் ஏனைய ஆறு உத்தியோகத்தர்களும் எந்த இடத்தில் பணியாற்றுகின்றனர் என்பதனை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | 07 ஊழியர்கள் தற்போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். | -மேற்படி- |